இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 253 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 10 – புதன்கிழமை 23 ஏப்ரல் 2025 – கோவை ★★ 10 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 253 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 10 - Wednesday 23 April 2025 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம்

# முரசொலி செல்வம் திருவுருவச் சிலை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.4.2025) முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சென்னை, ஏப். 23-**

**சென்னை – முரசொலி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலையை கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை திறந்து வைக்கிறார். 'முரசொலி' இதழில் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறுகிறது.**

அதுபற்றிய விவரம் வருமாறு:-

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் சிலை திறப்பு மற்றும் 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழா நாளை (24.4.2025 வியாழன்) மாலை 5 மணியளவில் சென்னை – கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் சார்பில் நடைபெறுகிறது.

முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

முரசொலி செல்வம் அவர்களின் 'சிலந்தி' கட்டுரைகள் நூலை, கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிடுகிறார்.

முதல் நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி



அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், மேயர்கள், துணை மேயர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். அனைவரும் வருகை தந்துநிகழ்ச்சியைசிறப்பிக்குமாறு முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

**முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'சிலந்தி' என்ற பெயரால் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைகள் - அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது.**

**பொதுவாகச் சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம். ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும். யாராலும் மறுத்து அறுத்து விட முடியாது. அந்தளவுக்கு வலிமையான வாதங்கள் வன்மையான எழுத்துகளால் வைத்து வந்தார்.**

**தி.மு.க.வைப் பற்றியோ - தலைவர் கலைஞரைப் பற்றியோ - என்னைப் பற்றியோ - ஏதாவது சிறு விமர்சனம் வந்தாலும் உடனடியாக செல்வம் அண்ணன் பேனாவைத் தீட்டி விடுவார். எங்கள் மீது சிறுதுரும்பு விழவும் விட மாட்டார். அந்தளவுக்குக் கழகத்தையும் - எங்களையும் போற்றிப் பாதுகாத்தவர் செல்வம் அண்ணன் அவர்கள். அவர் எழுதிய கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.**

---

## திருவண்ணாமலையில்

# ரூ.34 கோடி செலவில் 4 தளங்களுடன் டைடல் பூங்கா!

### டெண்டர் அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டது!

*சென்னை, ஏப். 23 -*

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களை பெருக்கும் நோக்குடன் முதல்முறையாக கடந்த 2000ம் ஆண்டு சென்னை தரமணியில் மிகப் பெரிய டைடல் பூங்கா திறக்கப்பட்டது. இதனை அப்போதைய முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம் ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டன. தூத்துக்குடியில் 32 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 63 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் திறந்துவைத்தார்.

இந்நிலையில், திருவண்ணாமலையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான டெண்டர் அறிவிப்பை தமிழ்நாடு அரசின் தொழில்துறை வெளியிட்டுள்ளது.

34 கோடி ரூபாய் செலவில் 4 தளங்களுடன் இந்த டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளதாகவும், ஓராண்டில் இதற்கான கட்டுமான பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம்!

# சமூகத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்!


### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு 'தி இந்து' ஆங்கில நாளேடு பாராட்டு!

**சென்னை, ஏப். 23 -**

**சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாக்கல் செய்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு அளிக்கும் மசோதாக்கள் சமூகத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என 'தி இந்து' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.**

மாற்றுத் திறனாளிகளுக்கான சட்டத்தை செயல்படுத்துதல் என்ற தலைப்பில் 'தி இந்து' ஆங்கில நாளிதழ் தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், வரலாற்றுத் தவறுகளையும் குறைபாடுகளையும் சரி செய்வதற்கு மிகவும் உறுதியான நடவடிக்கை தேவை என்றும், தமிழ்நாட்டில், மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான பாகுபாட்டை நிவர்த்தி செய்வதற்கான அண்மைக்கால முயற்சி, சமூகத்தில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் திருத்தங்கள் மூலம் அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி அமைப்புகளுக்கும் மாற்றுத்திறனாளிகளை நியமிக்க ஒரு மசோதா மற்றும் அனைத்து கிராம பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கும் மாற்றுத்திறனாளி ஒருவரை நியமிக்க வகை செய்யும் மசோதா என 2 மசோதாக்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த வாரம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதை சுட்டிக்காட்டி உள்ள இத்தலையங்கம், இந்த மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 650 பேர், கிராம பஞ்சாயத்துகளில் 12ஆயிரத்து



Enabling legislation

Nomination of persons with disabilities to local bodies is a pioneering move

Affirmative action remains one of the most effective ways of addressing historical wrongs and systemic deprivation. The most recent attempt to address deep-rooted discrimination against persons with disabilities in Tamil Nadu is likely to have a far-reaching impact for the community. Chief Minister M.K. Stalin tabled two Bills in the Assembly last week to increase the number of persons with disabilities in all local bodies in the State. While one Bill seeks to nominate persons with disabilities to all town panchayats, municipal councils and municipal corporations with amendments to the Tamil Nadu Urban Local Bodies Act, the second intends to bring into law the decision to nominate one person with disabilities to all village panchayats, panchayat union councils and district panchayats by amending the Tamil Nadu Panchayats Act. Mr. Stalin said once these Bills are enacted, there would be guaranteed posts for 650 persons with disabilities in urban local bodies, 12,913 in village panchayats, and 388 in panchayat unions, besides 37 persons with disabilities in district panchayats. At the moment, there are only 35

913 பேர், பஞ்சாயத்து யூனியன்களில் 388 பேர், மாவட்ட பஞ்சாயத்துகளில் 37 மாற்றுத்திறனாளிகளுக்கும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 35 மாற்றுத்திறனாளிகள் மட்டுமே உள்ளதாக முதலமைச்சர் சட்டப்பேரவையில் தெரிவித்தார் என்றும் இந்த மசோதாக்கள், மாற்றுத்திறனாளிகளின் கண்ணியத்தை உறுதி செய்வதோடு, அவர்கள் மீதான பாகுபாட்டைக் களைவதுடன், சமூகத்தின் அடிமட்டத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமவாய்ப்புகளை பயன்படுத்த முடியாதவர்களுக்கும் இயல்பான வாழ்க்கைக்குத் தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துவது அரசின் பங்களிப்பு மிகவும் முக்கியம் எனத் தெரிவித்துள்ள இத்தலையங்கம், பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து இடங்களிலும் மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவத்தை பெண்களுக்கு ஒதுக்க வகை செய்யும் 73வது மற்றும் 74வது அரசியல் சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு, தமிழ்நாடு உட்பட சில மாநிலங்கள் இதனை 50 சதவீதமாக அதிகரித்ததையும் சுட்டிக்காட்டி உள்ளது.

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கும் திட்டம், ஒதுக்கப்பட்ட சமூகத்தை சமூகத்தின் பிரதான நீரோட்டத்திற்கு கொண்டுவருவதுடன், அவர்களை தலைவர்களாகவும் உயர்த்துவதற்கான நாட்டிலேயே முதல் முயற்சியாகும் என்றும் பாராட்டி உள்ள 'தி இந்து' தலையங்கம், இதன் மூலம் ஒட்டுமொத்த சமுகத்திற்கும் பயனளிக்கும் வகையிலான மாற்றத்தை கொண்டு வரும் என்றும் தெரிவித்துள்ளது.

---

## கத்தோலிக்க திருச்சபை தலைவர்

# போப் ஆண்டவர் பிரான்சிஸ் மறைவு!

*வாடிகன், ஏப். 23 -*

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் ஆண்டவர் பிரான்சிஸ் (88) மறைவெய்தினார். 2013ம் ஆண்டு முதல் தற்போது வரை கத்தோலிக்க கிறிஸ்தவ சபையின் தலைவராக போப் பிரான்சிஸ் இருந்து வந்தார். 2013ம் ஆண்டு போப் பதவியில் இருந்து 26வது பெனடிக்ட் விலகியதை தொடர்ந்து பிரான்சிஸ் போப் ஆண்டவர் ஆனார்.

தென் அமெரிக்காவின் அர்ஜெண்டினாவை பூர்வீகமாக கொண்டவர் போப் பிரான்சிஸ். ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ் உள்ளிட்டோர் போப் ஆண்டவரை சந்தித்து ஆசி பெற்று இருந்தனர்.

இருப்பினும், கடந்த சில நாட்களாகவே அவரது உடல்நிலை மோசமாகவே இருந்தது. வயது



மூப்பு மற்றும் சுவாச பிரச்சனை காரணமாக போப் பிரான்சிஸ் சிகிச்சையில் இருந்து வந்தார். மேலும், அவரது உடல்நிலையை மருத்துவர்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில், வாடிகனில் உள்ள தனது வீட்டில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் மறைவெய்தியதாக அறிவிக்கப்பட்டது. ஈஸ்டர் பண்டிகைக்கு மறுநாள் போப் பிரான்சிஸ் மறைவெய்தியது பொது மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.